CC. 5/2022 – DATE 13.11.2025

PW1 – ராமசாமி

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் காவல் துறையில் எத்தனை ஆண்டுகள் பணியாற்றினேன் என்றால் 36 ஆண்டுகள் பணியாற்றினேன். கொளத்தூர் காவல்நிலையத்தில் எத்தனை வருடம் பணியாற்றினேன் என்றால் ஒரு வருடம் பணியாற்றினேன். எனவே அந்த பகுதி ஓரளவிற்கு எனக்கு பரிட்சயம் என்றால் சரி. இந்த வழக்கில் ஆய்வாளர் என்றைக்கு விசாரித்தார் என்றால் 16.12.2016 அன்று விசாரித்தார். அதற்கு முன்னிட்டும் பின்னிட்டும் என்னை அவர் விசாரிக்கவில்லை என்றால் சரி.

எங்கள் அன்றாட பணியை பொது நாட் குறிப்பில் குறித்து பராமரிக்க வேண்டும் என்றால் சரி. இந்த வழக்கு சம்மந்தமாக 16.12.2016ம் தேதி வாகன தணிக்கைக்கு சென்றது சம்மந்தமாக நான் பொது நாட்குறிப்பில் குறித்துள்ளேனா என்றால் குறித்துள்ளேன். என்னை ஆய்வாளர் விசாரித்தபோது அதிக லாபத்திற்காக விற்பனை செய்வதற்காக மணலை கொண்டு வந்ததாக வண்டியின் ஓனர் சின்னதுரை என்கிற துரையன் சொன்னார் என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அன்றைய தேதியில் வழக்கமான வாகன தணிக்கைக்குதான் ஆய்வாளருடன் சென்றேன் என்றால் சரி. நான் கையெழுத்து செய்த கைப்பற்றுதல் மகசர் எதிரியை நாங்கள் பார்த்த இடத்தில் தயார் செய்து என்னிடம் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரி. அந்த கைப்பற்றுதல்

மகசரில் என்ன பொருள் கைப்பற்றப்பட்டது, எந்த இடத்தில் கைப்பற்றப்பட்டது, காவல் நிலைய குற்ற எண் ஆகியவை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடம் கையெழுத்து பெறப்பட்டு பின்னிட்டு நாங்கள் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரி. அந்த இடத்தில் எதிரியையோ, மணலையோ, வாகனத்தையோ புகைப்படும் எடுக்கவில்லை என்றால் சரி. காவேரி ஆறு பகுதி சுமார் 16 கிலோமீட்டர் தொடர்ச்சியான நீளம் கொண்ட பகுதி என்றால் சரி. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மணல் எந்த இடத்தில் குறிப்பாக எடுக்கப்பட்டது என்பதை நானோ, ஆய்வாளரோ நேரில் சென்று பார்க்கவில்லை என்றால் சரி. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர்தான் கைப்பற்றுதல் மகசரில் மணல் கைப்பற்றப்பட்டது என்றால் சரி. அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் இல்லாததால் நாங்கள் மகசரில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றால் சரி.

என்னை ஆய்வாளர் விசாரித்தபோதும் யாரும் இல்லாததால் நான் கையெழுத்து செய்தேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. கைப்பற்றப்பட்ட மணல் எத்தனை மணிக்கு கொண்டு வரப்பட்டது என்றால் சுமார் அரை மணி நேரத்திற்குள் கொண்டு வரப்பட்டது. கைப்பற்றுதல் மகசர் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் ஆய்வாளரால் எழுதப்பட்டு அதில் நான் கையெழுத்து செய்தேன். காவல்நிலையம் வந்தபிறகுதான் வழக்கின் குற்ற எண் தெரிந்து கொண்டேனா என்றால் அதற்கு முன்பாகவே எனக்கு தெரியும். கொளத்தூர்–தண்டா ரோடு என்பது ஒரு முக்கிய சாலை என்றாலும் தொடர் போக்கு வரத்து உள்ள

ரோடு என்றால் சரி. நான் சொன்னவாறு அன்றைய தேதியில் நான் ஆய்வாளருடன் வாகன தணிக்கைக்கு செல்லவில்லை என்றும், வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டு பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எதிரியிடமிருந்து மணலையும், வாகனத்தையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.